2013 அக்டோபர் 28] [திரு. கே.டி. பச்சைமால்]

வாய்ந்த நிகழ்வு குறித்து இந்த அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்கள், நலத் திட்டங்களின் கூறுகளின்படியும், அரசாணைகளின்படியும் முறைசாரா தொழிலாளர்களுக்கு அடையாள அட்டைகள் மற்றும் பணப் பயன்கள் தங்குதடையின்றிக் கிடைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறைசாரா தொழிலாளர் நல வாரியங்கள் தொழிலாளர்களுக்குப் பெரும் துணையாக உள்ளன. உறுப்பினர்களிடம் முதலில் ஒரு சிறு தொகை பெறப்பட்டது. பிறகு அது கைவிடப்பட்டது. நல வாரிய உறுப்பினர் சேர்ப்பிற்குப் பரிந்துரைக்கும் உரிமை, பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களுக்குச் சட்டப்படியே வழங்கப்பட்டது. இப்போது அது பல இடங்களிலே மறுக்கப்படுகிறது. தொழிலாளர் பதிவு விண்ணப்பங்களைத் தொழிற்சங்கங்கள் சமர்ப்பிக்க நலத் திட்டக் கூறுகளில் வழிவகை செய்யப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். ஆனால், இது ஏற்கெனவே செயலில் இருந்தது. எனவே, நலத் திட்டக் கூறுகளில் மாற்றம் செய்து, அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்கள் பதிவு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க அனுமதி அளிக்கவேண்டுமெனக் கோருகிறேன். நல வாரிய உறுப்பினர்கள் கிராம நிருவாக அலுவலர்களின் சான்று பெறவேண்டுமென்ற நிபந்தனை தி.மு.க. ஆட்சியிலே விதிக்கப்பட்டது. இவையெல்லாம் தொழிலாளர்களை நல வாரிய உறுப்பினர் ஆகாமல் வடிகட்டவே பயன்பட்டன. எனவே, இதைக் கைவிட வேண்டும். அட்டை பெறுவதற்கு தொழிலாளி நேரில் வரவேண்டுமென்ற 'ஒரு முறை வருகை' மட்டும் வலியுறுத்தப்பட வேண்டும். முறைசாரா தொழிலாளர்கள் ஒரு நாள் வேலை இழந்து, கூலி இழந்து, வழிச் செலவு செய்து, 70, 80 கிலோ மீட்டர் பயணம் செய்து விண்ணப்பம் பெற ஒரு முறை, அட்டை பெற ஒரு முறை, ஆய்விற்கு ஒரு முறை, பயன்பெறுகின்ற படிவம் பெற ஒரு முறை, பணம் பெற ஒரு முறை என பல முறைகள் வரவழைக்கப்படக் கூடாது. இதுவும் தொழிலாளர்களை வடிகட்டவே பயன்படும். பதிவிற்கும், புதுப்பித்தலுக்கும் வங்கிக் கணக்கை நிபந்தனையாக்கக்கூடாது